# லங்காபுர பிரதேச சபை

## பொலநறுவை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 29 ஆந் திகதியும் கணக்காய்விற்கு முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மார்ச் 26 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய லங்காபுர பிரதேச சபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத்தவிர பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொளகைகளுக்கு அமைய லங்காபுர பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட பணக்கீட்டுக் குறைபாடுகளின் பொழிப்பு கீழே தரப்படுகின்றன.

| | | விடயங்களின் எண்ணிக்கை | பெறுமதி |
|---|---|---|---|
| | | | ரூபா |
| (i) | நிதிக் கூற்றுக்களிலுள்ள விடுபாடுகள் | 04 | 456,058 |
| (ii) | நிதிக் கூற்றுக்களில் குறைத்துக் கூறல்கள் | 03 | 31,187 |
| (iii) | நிதிக் கூற்றுக்களில் அதிகரித்துக் கூறல்கள் | 03 | 51,133 |

### 1.3.2 இணக்கம்செய்யப்படாத கணக்குகள்

(அ) நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற 2 விடயங்களின் மீதிகள் மற்றும் உப பேரேடுகளில் காணப்படுகின்ற மீதிகள் என்பன ரூபா 58,781 ஆல் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியை தவிர்த்த ஏனைய சொத்துக்களின் பெறுமதி மூதனத்திற்கு புறம்பான வருமான பங்களிப்பிற்கு சமப்படுத்த சேண்டிய போதிலும் அந்தக் கணக்குகள் ரூபா 3,490,309 தொகையால் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1 ஆண்டிற்கு மேல் செலுத்த வேண்டிய 07 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 3,345,508 ஆகும்.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 51,757,912 தொகையான பதினொரு கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்விற்கு வேண்டப்பட்ட தகவல்கள் சமர்ப்பிக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதி செய்ய முடியவில்லை.

### 1.3.5 இணங்காமைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் 1988 | |
| விதி 59 மற்றும் 67 | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின்படி சபையின் அதிகார எல்லையில் மெய்மையாய்வொன்று ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 இற்கு முன்னர் நடாத்தப்பட்டு கைத்தொழில்கள் மற்றும் வியாபாரம் செய்கின்ற இடங்களின் பட்டியல்கள் பற்றிய அறிக்கை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் வேண்டுகையின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2007 திசெம்பர் 19 ஆந்திகதிய 1528/21 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வர்த்தமாணி அறிவித்தல் | தலைவர் மாதம் ஒன்றிற்கு 400 லீற்றர் என்ற எல்லையை விஞ்சி எரிபொருள் பயன்படுத்த முடியாத போதிலும் மீளாய்வாண்டில் அத்தகைய எல்லையை விஞ்சி ரூபா 102,748 கிரயமான 1,381 லீற்றர் எரிபொருள் பயன்படுத்தியிருந்தார். |
| (இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 396 | 232-1-001-2-7744487 ஆம் இலக்க பிரதேச சபை வங்கி நடைமுறைக் கணக்கிலிருந்து 2008 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டு ஆனால் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்காத ரூபா 47,063 பெறுமதியான 6 காசோலைகள் மீது நிதிப்பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ii) நிதிப்பிரமாணம் 756 — பிரதேச சபை மற்றும் அவற்றுடன் இணைக்கப்பட்ட நூலகம் மற்றும் ஆயர்வேத மருந்தகம் என்பவற்றில் பொருள் மெய்மையாய்வு மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின்படி, முன்னைய ஆண்டிற்கான ரூபா 983,893 தொகையான நேரொத்த மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமான மிகையுடன் ஒப்பிடும் போது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமான மிகை ரூபா 3,761,897 ஆகும்.

### 2.2. வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டு மற்றும் மன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவற்றின் தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ள படியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய நிலுவை | மதிப்பிடப் பட்டது | உள்ள படியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய நிலுவை |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | 13 | 18 | - | 686 | 28 | - |
| (ii) | குத்தகை | 5,759 | 7,046 | 914 | 4,001 | 4,970 | 433 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வாடகைகள் | | | | | | |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 944 | 622 | - | 1,357 | 736 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 19,949 | 13,558 | 3,714 | 15,100 | 12,027 | 14,489 |

### 2.2.2 இறைச்சிக் கடை வாடகைகள்

2003 இலிருந்து 2009 ஆம் ஆண்டுவரையான 5 ஆண்டுகள் தொடர்பான ரூபா 310,008 தொகையான இறைச்சிக் கடை வடைகை நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 வியாபாரக் கடை வாடகைகள்

01 ஆணண்டிற்கு மேற்பட்ட ரூபா 301,537 தொகையான வியாபாரக் கடை வாடகைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 நீதி மன்றத் தண்டப்பணம்

2010 திசெம்பர் 31 வரை பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதி மன்றத்தால் அறவிடப்பட்ட ரூபா 2,313,183 தொகையான நீதி மன்ற தண்டப்பணங்கள் மற்றும் மகாண உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டவை சபையால் பெறவேண்டியவையாக இருந்தது.

### 2.2.5 முத்திரைக் கட்டணங்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயத்திடமிருந்து அறவிட வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் கணிப்பிடப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 ஏனைய வருமானம்

ரூபா 1,290,000 தொகையான இனங்காணப்படாத ஏனைய வருமானத்தினை இனங்கண்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம் முரண்களுடன் சேர்த்து கீழே தரப்படுகின்றன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவின விடயம் | பாதிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் | பாதிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| **மீண்டெழும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 14,216 | 10,509 | 3,707 | 13,222 | 10,295 | 2,927 |
| ஏனையவை | 7,143 | 6,973 | 170 | 7,859 | 6,482 | 1,377 |
| உப மொத்தம் | 21,359 | 17,482 | 3,877 | 21,081 | 16,777 | 4,304 |
| மூலதனச் செலவினம் | 2,600 | 9,693 | (7,093) | 6,490 | 17,020 | (10,530) |
| முழு மொத்தம் | 23,959 | 27,175 | (3,216) | 27,571 | 33,797 | (6,226) |

### 2.4 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியின் தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | ஊழியர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
|---|---|---|---|
| (i) | நிறைவேற்றுத் தரங்கள் | 02 | 01 |
| (ii) | இரண்டாம் தரங்கள் | 06 | 06 |
| (iii) | ஆரம்ப தரங்கள் | 20 | 45 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய பௌதீக வளங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையால் அறியப்பட்டிராத சுவீகரிப்பு காலத்திலிருந்து 108 சிறி 1706 ஆம் இலக்க மோட்டார் சைக்கிள் பல ஆண்டுகளாக பயன்படுத்தப்படாதிருந்தது.

(ஆ) 2005 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 400,000 பெறுமதியான குழாய்கள் பயன்படுத்தப்படாமல் பிரதேச சபை வளவில் விடப்பட்டிருந்தது.

(இ) 2007 ஆம் ஆண்டில் ரூபா 17,000 இற்காக கொள்வனவு செய்யப்பட்ட சீமெந்து கல்லரியும் இயந்திரம் பயன்படுத்தப்படாமல் பயனற்றிருந்தது.

### 2.5.2 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தினை விஞ்சியிருந்த கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 656,600 ஆகும்.

## 2.6 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

அரிமா உற்பத்தி இயந்திரத்தை பயன்படுத்துகின்ற பேக்கரியொன்று மீளாய்வாண்டில் தொடங்கப்பட்டிருந்ததுடன் தேவையான மூலப்பொருள் கொள்வனவு மற்றும் ஊழியருடைய சம்பளங்கள் என்பவற்றிற்காக 2010 ஒக்டோபர் முதல் திசெம்பர் வரை ரூபா 551,363 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும் உற்பத்தி விற்பனைகளிலிருந்து உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 363,639 ஆனதுடன் ரூபா 187,724 ஆன நட்டத்தில் விளைவித்திருந்தது. ஆகவே திட்டமிட்ட செயற்பாடு வெற்றியளித்திருக்கவில்லை.

## 2.7 வெளிப்படையான முறையீனங்கள்

சோமாவதி புனித நகரத்தின் வாகனத் தரிப்பிடக் கட்டணங்கள் சேகரிப்பதற்காக ரூபா 15,800 கிரயத்தில் 2010 ஆம் ஆண்டில் 300 பற்றுசீட்டுக்கள் தொகுதியொன்று அச்சிடப்பட்டிருந்த போதிலும் அந்த பற்றுச்சீட்டுக்கள் மீத சேகரிக்கப்பட்ட தரிப்பிடக் கட்டணங்கள் சபையால் பெறப்பட்டிருக்கவில்லை. அந்த பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் 2010 பெப்ரவரி 8 இல் மேற்கொள்ளபபட்ட கணக்காய்வுப் பரிசோதைனயில் கிடைத்திருக்கவில்லை. சபையால் அந்த பற்றுச்சீட்டுப் புத்தகங்கள் பெறல், கையளித்தல் அல்லது வழங்கப்பட்டதற்கோ எவ்வித சான்றுகளும் இருக்கவில்லை.

## 2.8 போதிய ஆதாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 132(i)(ஓ) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்படி அமைச்சின் முன்னங்கீகாரம் இல்லாமல் சபையின் அதிகார எல்லையில் சிரேஸ்ட குடியுரிமையாளர்களை கௌரவிப்பதற்காக மீளாய்வாண்டில் சபை நிதியிலிருந்து ரூபா 28,000 ஆன தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

## 2.9 செயலாற்றல்

(அ) கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் இன்மை

(i) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு மற்றும் 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎவ்/ஆர்/2/2/2/3/5(4) ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5(1) ஆம் பந்தியின்படி கீழ் பிரதேச சபைகளின் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் அடுத்துவரும் ஆண்டில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை உள்ளடக்கிய கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டிற்காக சபையின் குறிக்கோள்களை எய்துகையில் நிதி, இலக்கிடப்பட்ட மனித மற்றும் பௌதீக வளங்கள் என்பவற்றின் முறையான முகாதைத்துவத்திற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் (நிதி மற்றும் பௌதீகம்) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த பாதீட்டின்படி, 2010 ஆம் ஆண்டிற்காக சுய உழைப்பு வருமானம் ரூபா 26,655,180 ஆன அதேநேரம் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 21,243,748 அல்லது 80% சதவீதமாகும்.

## 2.10 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் சோரப்படுகின்றன.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு